## **இன்று பாஸ்காக் காலம் இரண்டாம் ஞாயிறு**

## **திருவழிபாடு ஆண்டு - B**

## **2024-04-07**

(*இன்றைய வாசகங்கள்:*

*திருத்தூதர் பணிகள் நூலிலிருந்து வாசகம்* 4: 32-35,

*திபா* 118: 2-4. 16*ய*b-18. 22-24,

*திருத்தூதர் யோவான் எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம்* 5: 1-6,

+*யோவான் எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 20: 19-31)

*திருப்பலி முன்னுரை*

*அன்புமிக்க சகோதர சகோதரிகளே! இயேசுவே ஆண்டவர் என்னும் இனிய நாமத்தில் நல்வாழ்த்துகள். இன்று பாஸ்காக் காலம் இரண்டாம் ஞாயிறு. உயிர்த்த இயேசுவின் பிரசன்னத்தில் நம்பிக்கையும், வேண்டுதல்களோடும், நாம் ஒன்று கூடியுள்ளோம். இயேசுவின் உயிர்ப்பினில் மனிதர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியும் மன அமைதியும் பிறக்கின்றது. பாவத்தின் விளைவாக மனித குலம் சந்திக்கும் எந்தத் தடைகளும் இயேசுவின் உயிர்ப்பினால் தகர்க்கப்படுகின்றது. உங்களுக்கு அமைதி உரித்தாகுக என்று தம் சீடரை வாழ்த்தி, பலப்படுத்திய இயேசு நமக்கும் அதே அற்புதமான ஆசீர்வாதத்தைத் தருகின்றார். அத்தோடு நாம் உடலிலும், ஆன்மாவிலும் நலம் பெற தூய ஆவியைப் பொழிந்து பாவமன்னிப்பு என்னும் அருட்சாதனத்திற்கான பணியையும், அனுமதியையும் அவருடைய பணியைத் தொடர்ந்தாற்றுகின்றவர்களுக்கு வழங்குகின்றார். இதன் வழியாக நாம் நம்பிக்கை கொண்டு ஒப்பற்ற மகிழ்ச்சியடைந்து பேருவகை கொள்வதோடு நம் நம்பிக்கையின் குறிக்கோளான ஆன்ம மீட்பையும் பெறுகிறோம். இந்தப் பேருண்மைகளை மனத்தில் ஆழப்பதித்தவர்களாகத் தொடரும் திருப்பலியில் பங்கேற்போம்.*

**விசுவாசிகள் மன்றாட்டுகள்:**

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*அன்பின் இறைவா!*

*எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் உமது உயிர்ப்பின் மகிமையை முழுமையாகப் பெற்று தோமாவைப் போல துணிவுடன் இறையரசை அறிவிக்க வேண்டிய அருளைப் பொழிய வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*ஒளியின் இறைவா!*

*பாஸ்கா காலத்தில் எங்கள் குடும்பங்களில் உமது அன்பு, அமைதி. பகிர்ந்து வாழும் நல்லமனம் போன்றவை அனைவரிடமும் நிறைவாக இருக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*உலகின் மீட்பரே இறைவா!*

*வாழ்வில் நம்பிக்கை இழந்த எம் விவசாயப் பெருமக்களின் வாழ்வாதாரங்கள் சிறப்படையவும் அவர்கள் மனித நேயத்துடன் நடத்தப்படவும் வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*இரக்கமுள்ள இறைவா!*

*புளித்த மாவை மாற்றி புதிய நல்ல மாவை வைத்து பாஸ்கா கொண்டாடுவது போல நாங்கள் அழுக்கேறிய பழைய வாழ்க்கையை விட்டு, சுத்தமான புது வாழ வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*வழிநடத்தும் இறைவா!*

*பல்வேறு பிரச்சினைகளால் துன்பப்பட்டு, நீரே ஆறுதல் எனத் தேடி வரும் மக்களுக்கு தூய ஆவியின் அருட்கொடைகளைப் பொழிந்து நல்பாதையில் வழிநடத்த வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*அன்புத் தந்தையே இறைவா!*

*உலகப் பற்றினால் உண்மைக் கடவுளாகிய உம்மை மறந்து வாழும் இளைஞர்கள் நீரே ஆண்டவர், நீரே கடவுள் என்பதை உணர்ந்து உம்மில் புதிய வாழ்வைக் காண மனமாற்றம் பெற வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*அமைதியின் தேவனே இறைவா!*

*இயேசு தம் சீடருக்கு வழங்கிய அதே அமைதியை நாங்கள் ஒவ்வொருவரும், மற்றும் உலக மக்கள் ஒவ்வொருவரும் பெற்று மகிழ்ந்திடவும் அனைத்துக் குடும்பங்களிலும் அமைதி, ஒற்றுமை வளர்ந்தோங்கிடவும் வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*வழிநடத்தும் இறைவா!*

*இன்று திருஅவை கொண்டாடும் இறை இரக்கத்தின் நாளின் மேன்மையை உணர்ந்தவர்களாக பிறர்மீது இரக்கம் வைத்து, அன்பு செய்து, உதவிகள் செய்து வாழும் மக்களாக எங்களை வழிநடத்த வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*